# செப்டம்பர்-2020 ம் மாத மன்றப்பொருள்

மன்றப்பொருள் : 1

காயல்பட்டணம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள் அவசர அவசியம் கருதி **2020–2021** ம் அண்டிற்கு வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.**6.00** இலட்சம் மட்டும் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.997/2015/அ1

**தீர்மான எண் 2050 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:2

காயல்பட்டணம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் இயங்கிவரும் அம்மா உணவகத்தில் உணவு விலை பட்டியல் இயந்திரம் பழுதுஆகி சரி செய்ய இயலாத நிலையில் உள்ளதால் அதற்கு பதிலாக புதியதாக ஒரு டோக்கன் வழங்கும் இயந்திரம் வாங்க உத்தேசி மதிப்பு தொகை ரூ.28,000/- வழங்க ஆணையர் அவர்களின் மன்ற அனுமதிக்கு

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கையாக முககவசம் அணியாமல் இருத்தல், சமூகஇடைவேளி கடைபிடிக்காமல் இருத்தல் மற்றும் பொது இடங்களில் எச்சில் துப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்கு அபாரதத் விதிப்பது தொடர்பாக நகர்பகுதிகளில் விளம்பர பதாகைகள் வைப்பதற்றும் போன்றவைகள் பற்றி விழப்புணர்வு ஏற்படுத்த சுகாதார ஆய்வாளரின் அறிக்கை படி நகராட்சி பகுதியில் 22 எண்ணம் விளம்பர பாதகைகள் வைப்பதற்கும் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சாந்தா டிஜிட்டல் ஆறுமுகநேரி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் செலவுத்தொகை ரூ.30,000/- னை பொது நிதியில் இருந்து வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.369/2020/அ4

**தீர்மான எண் 2051 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:3

காயல்பட்டணம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நுண்உரமாக்கல் மையம் மற்றும் ஆன்சைட் உரமையம் ஆகிய இடங்களில் உரமாக்கல் செயல்முறைபற்றியும் அதன் தொடர்பான நடவடிக்கைகள் அடங்கிய விளம்பர பாதகைகள் (14எண்ணங்கள்) வைத்திடவும் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சாந்தா டிஜிட்டல் ஆறுமுகநேரி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் செலவுத்தொகை ரூ.11,400/- னை பொது நிதியில் இருந்து வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.956/2019/அ4

**தீர்மான எண் 2052 அனுமதிக்கப்பட்டது**

மன்றபொருள்:4

காயல்பட்டணம் நகராட்சி வரவு செலவு கணக்கு 2019-2020 ஆண்டிற்கு தனியார் கணக்கர் மூலம் (Accounts) கணினியில் கணக்.குகளை சரிசெய்திட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.நீலச்சந்திரன் என்பவருக்கு தொகை ரூ.30000/- வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு

**தீர்மான எண் 2053 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:5

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி செப்டம்பர் 2020ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் 2054 அனுமதிக்கப்பட்டது**

மன்ற பொருள்:6

காயல்பட்டணம் நகராட்சியில் பொறியியல் பிவில் உள்ள டிஎன்.92எ 6369 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஆணையரின் முன் அனுதி பெற்று, அவசர அவசியம் கருதி 3 உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறந்த விலைப்புள்ளி வழங்கிய நியூஸ்டார் ஆட்டோமாபைல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் வேலை செய்த வகைக்கு செலவு தொகையாக ரூ88,500/– னை (என்பத்தி எட்டாயிரத்து ஐநூறு மட்டும்)பொது நிதியில் இருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகக்கலாம்.

அலுவலக குறிப்பு–

அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.81/2017/அ3

**தீர்மான எண் 2055 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:7

காயல்பட்டணம் நகராட்சியில் இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை ஆகிய இரு அமைச்சகங்களடன் இந்தி தொரில் நுட்ப கல்விக்குழுமத்தடன் இணைந்து உள்ளாட்சி அமைப்புகளில் துலிப் பயிற்சி திட்டதின் கீழ் இளம் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டு அதன் பொருட்டு அறிவிக்கை ஒன்று தினமணி பத்திரிக்கையில் 05.09.2020 அன்று விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ.4358/–னை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1142/2019/இ1

**தீர்மான எண் 2056 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:8

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட மங்களவாடி கிராமம், சர்வே எண் 481/1A2 என்ற இடத்தில் உள்ள தண்ணீர் வால்வு தொட்டிகளை அகற்றுவது தொடர்பாக திரு.முத்துக்குமார் என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.11476/2020 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.கே.கி.கிருஷ்ணதாஸ் என்பவர் ஆஜராகிய வகைக்கு, வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/– மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 850/2020/அ4

**தீர்மான எண் 2057 அனுமதிக்கப்பட்டது**

மன்றப் பொருள்: 9

காயல்பட்டணம் நகராட்சி பொறியியர் பிரிவில் உள்ள TN 69 U 9148 எண். கொண்ட ஈப்பு வாகனத்தில் பொறியாளர் மற்றும் ஆணையாளர் ஆகியாரின் வாய்மொழி உத்தரவின்படி, அவசியம் கருதி குளிர் சாதன வசதி செய்திட, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நியூஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் மூலம் பொருத்தி வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.75,000/- னை (என்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
மன்றம் அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். 344/2011/அ4

**தீர்மான எண் 2058 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:10

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண்.158/98/2014ன்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்காக 40 தற்காலிக பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய நிர்ணயம்படி மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்சமயம் மேற்படி பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண். 13433/2018/ஜே1 நாள் 17.09.2018 ன்படி, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, மேற்படி டெங்கு ஒழிப்பு பணிகளை, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திடவும், மேற்படி டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கிட ஏற்படும் செலவினங்களையும் பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்ற அனுமதி பெறப்பட்டிருந்தது. தற்போத மேற்படி நடைமுறைகள் எடுக்க கால அவகாசம் தேவைப்படுவதால் மேலும் 3 மாத காலத்திற்கு தற்போதைய நடவடிக்கைகளையும் செலவினங்களையும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.720/2014/அ1

**தீர்மான எண் 2059 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்: 11

காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள Lan Connection and Intercom, Copier சர்வீஸ் மற்றும் புதிதாக நிறுவிடவும், Anti Virus, ஆப்ரேட்டிங் மென்பொருள் மற்றும் பொறியியல் பிரிவுக்கு Auto Card மென்பொருள் நிறுவிடவும், கணினி, பிரிண்டர் உதிரி பாகங்கள் வாங்கிடவும் உத்தேச செலவுத்தொகை ரூ.1.00 இலட்சம் மட்டும் பொது நிதியில் இருந்த செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.997/2015/சி2

**தீர்மான எண் 2060 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்:12

காயல்பட்டணம் நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் ஓராண்டு காலம் தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு செய்திட, உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்றிடவும், குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் தொகையினை அனுமதித்து அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1013/2016/சி2

**தீர்மான எண் 2061 அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
காயல்பட்டணம் நகராட்சி